மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

குடியிருப்புகள்

***3173—திரு. G.V. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழவைப்பார் ஊராட்சியில் மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

தூத்துக்குடி மாவட்டம், கீழவைப்பார் ஊராட்சிக்குட்பட்ட கீழவைப்பார் மற்றும் சிப்பிக்குளம் ஆகிய மீனவர் கிராமங்களில் மீனவர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோடி மக்களின் கலங்கரை விளக்கமாக விளங்குகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், கீழவைப்பார் ஊராட்சியில் ஏறக்குறைய 6,000 மக்கள் வசிக்கின்றார்கள். அந்த ஊராட்சியில் அகமதுபுரம், ஸ்ரீவைகுண்ட பெருமாள்புரம், கீழவைப்பார், சிப்பிக்குளம் ஆகிய நான்கு மீனவ குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்த மீனவக் கிராமங்களில், 100–க்கும் மேற்பட்ட மக்கள் வீடுகள் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய முந்தைய ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட ஏறக்குறைய 62 வீடுகள் ஓட்டு வீடுகளாக இருக்கின்றன. அந்த வீடுகள் தற்போது பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள்*

2023 ஏப்ரல் 13]

அந்நியச் செலாவணியை அதிகமாக நம்முடைய நாட்டுக்கு ஈட்டிக் கொடுக்கிறார்கள். அந்த மக்கள் சிறப்பான நல்வாழ்வு வாழ்வதற்கு, தற்போது நீலப் புரட்சித் திட்டத்தின்படி, வீடு ஒன்றுக்கு ரூ.1,70,000/– மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக, ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு ஏறக்குறைய ரூ.3 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. MGNREG *திட்டம்,* sanitation *உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை* club *செய்து ரூ.3 இலட்சம் நிதி கொடுக்கப்படுகிறது. அதனால், மீனவ மக்களுக்கும் மீனவர் நலத் துறையின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், வீடு ஒன்றிற்கு ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தால், மீனவ மக்கள் அந்த வீடுகளைச் சிறப்பாகக் கட்டிக்கொள்வார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *எனவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீலப் புரட்சித் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு இந்திரா குடியிருப்புத் திட்ட வழிமுறைகளின் அடிப்படையில், 25 சதுர மீட்டர் பரப்பளவுள்ள ஒரு வீட்டிற்கு ரூ.1,70,000/– ஒதுக்கீட்டில், 5,000 வீடுகள், ரூ.85 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்தவகையில், விளாத்திகுளம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், சகோதரர் திரு. மார்க்கண்டேயன் அவர்கள், கீழவைப்பார், சிப்பிக்குளம் போன்ற பகுதிகளுக்கு அவர் எவ்வளவு வீடுகள்*

கேட்டுள்ளார்களோ அனைத்தும் வழங்கப்பட்டு, அவை முழுவதுமாக நிறைவடையாத நிலையில் இருக்கின்றன. காரணம், இன்றைக்கு வீடு கட்ட வேண்டுமானால், அத்திட்டத்திற்கு ரூ.1,70,000/– வழங்கப்படுகிறது. மீனவர்களால் அத்திட்டத்தின்மூலம் வீடுகளைக் கட்டுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டு, பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 5,000 வீடுகள் வழங்கப்பட்டவற்றில், ஏறக்குறைய 2,879 வீடுகள்தான் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2,121 வீடுகள் கட்ட முடியாமல் இருக்கும் நிலையில் உள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்வகையில், உள்ளாட்சித் துறையின்மூலம் கட்டப்படுகின்றவகையில், வீடுகள் கட்டுவதற்காக வகுக்கப்பட்டுள்ள வழிவகைகளின் அடிப்படையிலும், மீனவர்களுக்கும் அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தத் துறையின் அமைச்சர் அவர்களையும் அணுகி, எங்கள் துறை அலுவலர்களையும் அணுகி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அளவிலான வீடுகளை, அவர்களுக்குக் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகளை எங்கள் துறை எடுக்கும் என்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.1,70,000/– திட்ட மதிப்பீட்டில் வீடுகள் கட்ட முடியாத சூழ்நிலையில்தான், அரசு ஒதுக்கீடு செய்துள்ள திட்டத்தில், சரிபாதி வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன என்பதை நன்கு ஆராய்ந்து, துறை சார்ந்த அமைச்சர் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக, கூடுதலாக நிதியைப் பெற்று, 'அவர்களுக்கு வழங்கப்படும்' என்று உறுதியளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கீழவைப்பார் ஊராட்சியின் ஒருபுறம் வங்காள விரிகுடா கடலும், மற்ற மூன்று திசைகளில் ஏறக்குறைய 5,000 ஏக்கர் உப்பளப் பகுதியாகவும் இருக்கின்றது. அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் பெறுவதில் மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில். . .

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டால் கேளுங்கள், இல்லாவிட்டால் அமருங்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் மட்டும். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், CSR திட்டத்தின்கீழ், அப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மீனவ கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் மீன் வளத் துறைமூலம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் CSR fund அல்லது அப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகவாவது, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகத்தான் குடிநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் அவர்களும், உள்ளாட்சி அமைப்புகளை அணுகுவார்களேயானால், எங்கெங்கெல்லாம் குடிநீர் இல்லையோ அவ்விடங்களிலெல்லாம் குடிநீர் வழங்குவதற்குண்டான அனுமதியும், மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் பெருமக்களாகிய நாங்களும், உங்களுடன் இணைந்து எடுக்கிறோம் என்பதை உறுதியாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

155—